கௌதம் பதிப்பகம்
பேசி: +91-94440-86888 www.gowthampathippagam.com

# பண்டார சாத்திரங்கள்

## அம்பலவாண தேசிகர்

அருளிய

# சன்மார்க்க சித்தியார்

நேரிசை வெண்பா

சிறியேன் அறியாமை தீர்ப்பதற்குப் புத்தி
அறியேன் எனினும் அருளின் - நெறியே
முளைத்தார்கள் நீர்மை முதிரவினா வுற்றேன்
அளித்தால் நமச்சிவா யா. 1

பாசமாய்ச் சுத்தப் பசுவாய்ப் பதியாகித்தே
தேசுற்ற ஆவிச் சிறப்பென்றான் - நேசம்
உடைத்தாய்த் தனுவற் றுணராமல் கண்ணை
அடைத்தாய்வ தேதாம் அறை. 2

அறிவாய்ப் பரிபூ ரணமாய் அகண்ட
செறிவாய் உளமொளித்த தேசா - பிறிவாகி
உன்னிற் றனுவாய் உறுங்கண் இமைநீக்கில்
அந்நிய்மேன் ஆவாய் அறை. 3

உளக்கண் விழித்தார்க் குறுங்கதிராய் உன்னை
விளக்கிச் செக இருளை வேறாய் - ஒளிப்பைஎன
மாயும் செகமுல்ளத்து மன்னுமெனக் கண்ணைமறைத்
தாயுமருள் ஏதாம் அறை. 4



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

அம்பகத்தை மூடியருள் ஆய்வது நூலோதிச்
செம்பொருளை கேட்டுத் தெளிவதுவோ - நம்பனருட்(கு)
ஏற்ற உ பாயநிட்டை ஏதாகும் மும்மலத்தைப்
பாறறுவாய் ஒன்றைப் பகர். 5

அணியாய்த் திருநீ றணிவார்கள் கண்ணின்
மணியே உனைவேண்டி வந்து - பணியத்
தொடும்போது மூர்ச்சை துயரகல நீற்றை
இடும்போ தகல்வாய் இதென். 6

நினைத்தார்தம் நெஞ்சத்(து) அமுதாகும் உன்னைத்
தனைத்தான் அறிவாரே சார்வார் - எனத்தலோ
ஞானஞ் சுழுமுனையால் நல்குமென வாய்நீரைப்
பானம் பணல் என் பகர். 7

சன்மார்க்க மென்னத் தகுமார்க்கம் ஓரியல்பாம்
பன்மார்க்க மென்னப் படாததனால் - நன்மார்க்கம்
காயம்ற ஆவி கருதானாம் கண்மூடும்
மாயமென் மாணா வரும். 8

நேத்திரத்தை உற்ற பொருள் நேத்திரத்தை நீங்கின்மன
மாத்திமே அன்றிஉளம் மன்னாதால் - நீத்துடலை
அவிப் பயனறிவார் அம்பகத்தை மூடியருள்
பாவிப்பர் அல்லரெனப் பார். 9



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

காயமனத் தால்சிவனைக் காணலாம் என்பதனுக்(கு)
ஆய மறையும் அறையாதால் - ஞாயத்
தனுமாய ஆவி தனுவாம் இறைவர்க்(கு)
இனிமாய மில்லையென எண். 10

அறிவாய்த் தனுவை அறிவார் மலத்தைப்
பிறிவார் உளம்பே ரறிவாய்ச் - செறிவாந்
தனுவால் அறிவார் உளமே தனுவாய்
உனுவார் திருவுருவென் றோர். 11

ஊனாய் உயிராய் உணர்வாய் உரையிறந்த
தேனாய் உளமறைந்த சிற்பரத்தை - வானாய்
ஒளியாய் உருவாய் ஒலியாய் உணர்வார்
தெளியாய் தமையென்னத் தேர். 12

தனைத்தான் இவ் வாறென்னத் தானறியார் சம்பு
வினைத்தான் எவ் வாறறிந்து மேவ - நினைத்தார்
உறுமோ மனமதனில் ஒன்கணிமை நீக்க
அறுமோ நமையாள் அருள். 13

சட்டகத்தை நீக்கச் சதுரறியார் கண்மூடி
நிட்டையெனப் பாவித்து நிற்பதனால் - சுட்டிப்
பத்மடைவ தல்லால் பரசிவத்தோ டத்து
விதமடைவ தின்றாம் வினை. 14



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

சிந்திப்பார் அர்ச்சிப்பார் சேர்ந்திமையால் அம்பகத்தைப்
பந்தித் திதயத்தில் பாவிப்பார் - பெந்தித்த
சாலோ மாதிப் பயனோக்குச் சற்குருவால்
நூலோதி னார்க்கறிவே நோக்கு. 15

புரையேய் செவிதா ரகமாப் புகுமால்
வரையேய் அருணூலின் மாண்பவ் - வுரையே
பதிபசுபொய்ப் பாசத்தின் பண்புதேர் வித்துக்
கதிசேர்க்குஞ் சன்மார்க்கக் கற்பு. 16

அறிவால் உணர்த்தி அறியாமை நீக்கிப்
பெறுமாறே அத்துவிதம் பேரா - மறுமாற்றி
ஆவியே ஈசன் அருவினையைக் காட்டாமல்
பாவியென்பார் சற்குருவோ பார். 17

உன்னைத் தனுவை உயிர்க்குயிரை உள்ளத்துப்
பின்னமற நிற்குமலப் பெற்றியையுஞ் - சொன்ன
சுருதிகுரு வாக்குச் சுவானுபவம் ஒன்றத்
தெரிவிப்பான் தேசிகனாய்த் தேர். 18

எங்கும் அறிவாய் எழுந்தசிவா னந்தத்தைத்
தங்குநய னத்தடக்கித் தான்விழிக்கப் - பங்கமுறக்
கற்குநிட்டை யாகுங் கருதியறி வாய்நிறைந்து
நிற்குநிட்டை யல்லவென நில். 19



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

அகக்கண் திறந்தார்க் கறிவல்ல்ணால் ஒன்றும்
புகத்தக்க தில்லையெனும் பொற்பான் - முகக்கண்
நிறைத்தார்மற் றோரகத்தின் நீடிருளாற் கண்ணை
மறைத்தார் செகத்தஞ்சு வார். 20

அகத்திமிரத் தாலாவி ஆகமாய்த் தீய
செகத்துமய லாமூர்ச்சை செய்யா - இகத்தரனைப்
பெற்றார்தங் காயமதும் பேரறிவாம் மெய்மூர்ச்சை
உற்றார் பொய்த் தீவினையென் றோர்ச். 21

உரையே அகவிருளுக் கொண்க்திரே யாமால்
வரையார் அறிவையோர் மாண்பைப் - பரஞானம்
சாதிப்பா ரும்கேட்டல் சிந்தனையைச் சார்ந்துமலஞ்
சேதிப்பா ரென்னத் தெளி. 22

மனுவே திருநீற்றை மன்னுமால் ஞானத்
தனுவே தவிர்க்கத் தகாதே - துனவே
அருள்மால் திருநீ றணிய அகலும்
மருள்மால் எனவே மத். 23

வன்னமுற்ற காயத்தை மாற்றி அறி வேஎன்னத்
தன்னையுற்றார்க் கின்பாகுந் தாணுவற்ப் - பீன்னமுற்றா
ஊனீர்மை தானாய் உணரும்பொய் மக்கட்கு
வாய்நீர் அமுதாய் வரும். 24



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com

அருந்துமனம் வாயால் அகற்றி அற்க் கோழை
திருந்தாருள் சேருமெனுஞ் சேயாய்ப் - பொருந்தும்
தனுக்கோழை நீங்காது தாதனறி ஞானம்
உனக்கோழை எந்நாள் உறும். 25

செகத்திமிரம் தீர்க்கும்வான் செலதிர்போல் ஆவி
அகத்திமிரம் தீர்க்கும் அருள்நூல் - பகுத்தறியப்
புத்தியில்லார்க்(கு) எல்லாம் பொருளாகுங் கண்ணற்றார்
அத்திகண்டாற் போலென் றறி. 26

நன்மார்க்க நற்குரவோர் நாட்டுமரு ணூனோக்கிச்
சன்மார்க்க சித்தியெனத் தானுரைத்தேன் - புன்மார்க்கம்
அற்றார்தம் நெஞ்சத் தமுதாகுஞ் செகமார்க்கம்
பெற்றார்க் கிதுபேத மாம். 27

காயமெனக் குள்ளடங்கி காதலித்த யான்கருணை
நேயநீ யாயடங்கி நிற்பதனுக் - காயநிட்டை
வைத்தாய் சிவஞான வாரியருள் மல்லேறே
அத்தா நமச்சிவா யா. 28

சன்மார்க்க சித்தியார் முற்றிற்று

சன்மாக்க சித்தியெனச் சாற்றுமிரு பாளெட்டைப்
புன்மார்க்கஞ் சென்ரோர்க்குப் போக்கினான் - நன்மார்க்கம்
காட்டா வடுதுறையில் கண் அம் பலவாணன்
தாட்டா மரையெனக்குத் தந்து.

*****



Our Websites
www.chennailibrary.com, www.chennainetwork.com, www.agalvilakku.com, www.deviscorner.com
www.attavanai.com, www.tamilagarathi.com, www.gowthampathippagam.com, www.dharanish.in, www.dharanishmart.com